அனுப்புநர் | பெறுநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

**ந.க.எண். 101888 /டி(3) /2021** **நாள் : 24.08.2022**

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு, அக்டோபர் 2022 – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் –தொடர்பாக.

**பார்வை :** இதே எண்ணிட்ட இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள்.04.08.2022.

*****

பார்வையில் காணும் செய்திக்குறிப்பில், 01.10.2022 (சனிக்கிழமை) நடைபெறவுள்ள தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் பதினொன்றாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் (CBSE/ICSE உட்பட) www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவங்களை 22.08.2022 முதல் 09.09.2022 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

**பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்;-**

மேற்குறிப்பிட்டத் தேர்விற்கு விண்ணப்பிக்க 11- ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களைச் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக 25.08.2022 பிற்பகல் முதல் 09.09.2022 வரை பதிவேற்றம் செய்யலாம் என்ற விவரத்தினைத் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி, மெட்ரிக் பள்ளி, ஆங்கிலோ-இந்தியன், மற்றும் CBSE/ICSE பள்ளிகளுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**அறிவுரைகள்**

1. பள்ளிகளுக்கான UDISE CODE– ஐ பயன்படுத்தி விண்ணப்பித்த மாணவர்களின் EMIS எண்ணினைப் பதிவு செய்தவுடன் பெரும்பாலான விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும். அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். ICSE / CBSE/KV மாணவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தும். **இவ்வாண்டு புதியதாக விண்ணப்பிக்கும் பள்ளிகள் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பதிவு (Register) செய்த பின் புதிய USER ID, PASSWORD – ஐ பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.**

..2

<u>பதிவேற்றம் செய்யும் போது நினைவில் கொள்ள வேண்டிய விவரங்கள்:</u>

2. தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரியானதா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்தப் பின்னரே பதிவேற்றம் செய்ய வேண்டும்.
3. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டுடன் (Pin Code) பதிவு செய்யப்படவேண்டும்.
4. **வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.**
5. பெற்றோரின் தொலைபேசி/அலைப்பேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/அலைப்பேசி எண்ணையே பதிய வேண்டும்.
6. பதிவேற்றம் செய்த விவரங்களை ஒப்புகைச் சீட்டை கொண்டு தேர்வரின் விவரங்கள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று உறுதி செய்துகொள்ளவும்.
7. மேற்படி தேர்விற்கான தேர்வுக் கட்டணம் ரூ.50/– வீதம் Online –இல் செலுத்த வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்த இறுதி நாளான 10.09.2022 மாலை 06.00 மணிக்குள் Online –இல் தேர்வுக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
8. பதிவேற்றம் செய்த விவரங்களில் மாற்றம் ஏதேனும் இருப்பின் தேர்வுக் கட்டணத் தொகை செலுத்துவதற்கு முன் சரி செய்து கொள்ளலாம். அதன் பின் எந்த பதிவுகளும் கண்டிப்பாக மாற்ற இயலாது.
9. பதிவேற்றம் முடிந்தவுடன் தேர்வர்களின் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் சீட்டு (ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம்) சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலர்களிடம் 15.09.2022–க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பித்தப் பள்ளிகளில் இருந்து தேர்வுக் கட்டணத் தொகை பெறப்பட்டுள்ளதா என்பதை உதவி இயக்குநர்கள் உறுதி செய்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

- விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் காலம்: 25.08.2022 முதல் 09.09.2022 வரை
- விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் : 09 .09.2022
- தேர்வுக்கட்டணம் Online –இல் செலுத்த வேண்டிய கடைசி நாள். 10.09.2022
- பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் **(Summary Report)** மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் சீட்டை **(Fees Receipt)** உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்: 01.09.2022 முதல் 15.09.2022 வரை

நிர்ணயிக்கப்பட்ட கடைசித் தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனவும், புறச்சரக எண் (Out of Range number) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வுக்கட்டணம் செலுத்தாதத் தேர்வர்களுக்கு தேர்வெழுத அனுமதி வழங்க இயலாது.

தேர்வரின் விண்ணப்பங்கள் மற்றும் ஒப்புகைச் சீட்டுகள் சம்பந்தப்பட்டப் பள்ளிகளின் தலைமையாசிரியர் / முதல்வர் வசம் வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

<u>நகல்.</u>

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
   – தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.